# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 பிப்ரவரி 2003 இதழ் - 2



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா
☎04257-230030, 230382. Cell : 98427 - 30382
E-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | இப்படி இருந்தால் | 7 |
| 3. | பெண்கள் பகுதி | 11 |
| 4. | வாலிபர் பகுதி | 15 |
| 5. | II கொரிந்தியர் ஒரு கண்ணோட்டம் | 20 |
| 6. | சிறுவர் பகுதி | 21 |
| 7. | கர்த்தருடைய சபை... | 23 |
| 8. | முக்காடு | 27 |
| 9. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 31 |

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

| | |
|---|---|
| Editor | Honorary Editor |
| S. Rajanayagam | J.C. Choate |

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.16 February - 2003 Issue-2


நிறுவன ஆசிரியர் உரை

## "இயேசு அழுகிறார்"

தற்காலத்தில் அரசியல், சமுதாய, சமயங்களில் கொள்கை பலத்துக்கு மக்கள் கூட்டமே அளவுகோல் என்றொரு புதிய நடைமுறை அமுலாகி விட்டது. வேடிக்கை காட்டியும், ஆடியும், பாடியும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும், எப்படியோ மக்கள் கூட்டத்தைத் திரட்டிக் காட்ட வேண்டும். அதற்கு எந்த யுக்தியை வேண்டுமானாலும் கையாளலாம். பிறகு அதற்குத் தங்களுக்குத் தேவையான முத்திரைகள் குத்தி, "எங்கள் கட்சியின் செல்வாக்கைப் பாரீர்! "எங்கள் இன மக்களின் எழுச்சி காணீர்", "எங்கள் சமயநெறிகளைப் பின்பற்றுகிற பக்த கோடிகளின் எண்ணிக்கை காணீர்!" என்ற நாளேடுகளில் முழுபக்க விளம்பரங்கள், நாற்சந்திகள் தோறும் பெரும் செலவில் பல வண்ணங்களில் விளம்பர போர்டுகள், கட் அவுட்கள், ஊர் முழுவதும் தோரணங்கள் வீதிகள் தோறும் ஒலி பெருக்கிகளின் ஓலங்கள் மூலம் தங்கள் பின்னால் ஒரு மாபெரும் மக்கள் சக்தி இருப்பதாகக் கூறி அரசாங்கத்தை மிரட்டுகின்றனர். அப்பாவி மக்களை நம்ப வைத்து குறிப்பிட்ட சிலர் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

சமீப காலத்தில் இந்த வியாதி கிறிஸ்தவ மார்க்கத்தையும் தொற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஒரு உலகப் பிரசங்கியார் கலந்து கொண்ட ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே நான் கண்டதையும், கேட்டதையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்தக் கூட்டம் நகரின் பிரபலமான சபைப் பிரிவுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நடத்தினதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டத்தைப் பற்றி பிரபல தமிழ், ஆங்கில நாளேடுகளில் முழு பக்க விளம்பரங்கள் வாரக் கணக்கில்

வெளிப்பட்டிருந்தன. நகர் முழுவதும் மற்றும் சுமார் 30 கி.மீ. வட்டத்தில் உள்ள பட்டி தொட்டிகளிலும் பலவண்ணச் சுவரொட்டிகள் – நகரின் நுழைவாயிலில் அரசியல் தலைவர்களுக்கு வைக்கப்படுகிற அளவுக்கு கட் அவுட். அதுபோக லட்சக் கணக்கில் கைப்பிரதிகள், வீதிகள் தோறும் ஆட்டோவில் அறிவிப்புகள்.

பல இலட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற இந்தக் கூட்டத்திற்கு வண்ண விளக்குகள், ஆயிரக்கணக்கில் செலவிட்டு ஆளுயர மேடை, வீடியோ கவரேஜ் என்று ஏதேதோ புதுமைகள், மைதானத்தைச் சுற்றிலும் ஏராளமான கடைகள் அவைகளில் 'பிரபலங்கள்' எழுதியதாகச் சொல்லப்படுகிற நூல்கள், அவர் பாடிய கேசட்டுகள், அன்னாருடைய உருவம் பொறித்த பேட்ஜ்கள், ஸ்டிக்கர்கள், பைபிள்கள்கூட இருந்ததாக ஞாபகம், வியாதி தீர்க்கும் எண்ணெய் வியாபாரம் விற்கிறவர்கள், வாங்குபவர்களுடைய பேரங்கள், போதாதற்கு சுண்டல், பாப்கார்ன், குழந்தைகளுக்கு பலூன் வகைகள் என்று ஏறக்குறைய ஒரு தேர்த்திரு விழாவைப் போன்ற சந்தடி.

அங்கே அமைக்கப்பட்டிருந்த ஆளுயர மேடையில் சமயக்குரவர்கள் மட்டுமல்ல அரசு உயர் அதிகாரிகள் (அவர்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களா என்று தெரியவில்லை). நகர்ப் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருந்தனர்.

இதையெல்லாம் பார்த்த ஒரு கிராம சபை விசுவாசிக்கு ஒரே ஆனந்தம். எவ்வளவு திரளான கூட்டம், எத்தனை பேர் சத்தியத்தைக் கேட்க திரண்டு வந்திருக்கிறார்கள். கடைசிகாலத்தில் எல்லா மக்களும் கிறிஸ்துவை அண்டிக் கொள்வார்கள் என்பது எவ்வளவு உண்மை என்று புளகாங்கிதம் அடைந்து நின்றார். ஆனால் அங்கே வந்திருந்த பக்த கோடிகள் சத்தியத்தை கேட்கிறதற்காக அங்கே வரவில்லை. தங்கள் கட்சித் தலைவர், அரசு அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கும்பொழுது நாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் போனால் மரியாதையாக இருக்காதே. மேலும் என்னதான் செய்கிறார்கள், பேசுகிறார்கள், ஆள் எப்படியிருப்பார்? எந்த மாதிரி உடை அணிந்திருப்பார் என்றும் அவர்கள் விளம்பரப்படுத்தின மாதிரி வியாதிகள் நீங்குறதா? பேய்கள் ஓடுகிறதா? என்று வேடிக்கை பார்க்கிறதுக்கும் தான் வந்திருக்கிறார்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியாது, பாவம்!

கும்பகோணத்தில் மகாமகத்தின் போது கூடிய கூட்டத்தையும் அங்கு பக்தகோடிகள் மிதிபட்டுச் செத்ததையும் அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

சற்றே நகர்ந்து அங்கே நின்று கொண்டிருந்த சில பெரியவர்களிடம் கூட்டத்தின் சிறப்பைப் பற்றி விசாரித்தேன். "இப்படிப்பட்ட கூட்டங்களைப்

போட்டு நம்முடைய ஒற்றுமையையும் வலிமையையும் புறஜாதி மக்களுக்குக் காட்ட வேண்டும். ஏனெனில் சமீப காலத்தில் கிறிஸ்தவ மார்க்கம் சுக்கு நூறாக உடைந்து சிதறி, புற மதஸ்தர்கள் மத்தியில் ஒரு கேலிப் பொருளாகி விட்டது என்றும், ஆகவே நமக்குள் இருக்கிற வேற்றுமை உணர்வுகளை மறக்க முடியாவிட்டாலும், ஒரு சில நாளைக்காவது மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னால் நாங்கள் ஒற்றுமையாகத் தான் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்ள இது பயன்படும்'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி விட்டு அவருடைய அறியாமையை எண்ணி வேதனைப்பட்டேன். ஏனெனில் அவர் வெளியிட்ட கருத்து சிந்திக்க வேண்டிய விஷயம். உலகத்து மக்களை திருப்திப்படுத்துவது தான் கிறிஸ்தவ மார்க்கத்தின் தலையாய நோக்கமா? அல்லது பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதும், மகிமைப்படுத்துவதுமா? "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாக விரும்பினார்கள்'' என்று பரிசுத்த ஆவியானவர் யோவான் மூலமாக உரைத்ததை நினைத்துக் கொண்டேன். (யோவான்12: 43).

சுவிசேஷப் பிரகடனம் செய்யப்படுவதின் தலையாய நோக்கம்; மக்கள் மத்தியில் மண்டிக் கிடக்கும் பாவங்களையும், அதனால் விளையும் கேடுகளையும் அதற்குப் பரிகாரமாக தேவன் செய்திருக்கிற ஏற்பாட்டையும் அதை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டி மனந்திரும்ப வேண்டும்; இல்லாவிட்டால் மடிந்து போவீர்கள் என்று எச்சரிக்க வேண்டும். அதை யோவான் ஸ்நானகனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்களும், சுவிசேஷப் பிரகடனத்தின் மையப் பொருளாக வைத்து தங்கள் பிரசங்கங்களைச் செய்தார்கள். (மத் 3: 1-10; மாற்கு 1: 4,5, மத் 11 : 20, லூக் 13 : 1 – 3, அப் 2 : 38; அப் 3 : 19, 20).

ஆனால், அந்தப் பிரபலப் பேச்சாளர் மனந்திரும்புவதைப் பற்றி வாயே திறக்கவில்லை. பாவத்தின் நச்சுத் தன்மையைப் பற்றி எச்சரிக்கவேயில்லை. அவருடைய இருபது நிமிஷத்துக்கும் குறைவான பிரசங்கத்தில் அவர் கூறியதின் சுருக்கும் : "இயேசு நல்லவர், வல்லவர்; அவரை விசுவாசித்தால் உன் வியாதிகள் நீங்கும். உன் வாழ்க்கை சுபிட்சமடையும், எண்ணங்கள் நிறைவேறும், உன் கஷ்டங்கள் தீரும். குடிசை கோபுரமாகும் என்பது தான். பல இலட்ச ரூபாய் செலவு செய்து கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தின் மீதி நேரமெல்லாம், கேசட் விற்பனை, பற்றாக் குறைத் தொகையை ஈடு செய்ய வசூல் வேட்டை, எங்கேயோ நடந்ததாகச் சொல்லப்பட்ட சில நோய்கள் குணமான சாட்சியங்கள், வட்ட மாவட்டச் செயலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள்

அறிக்கைகள், இளம் பங்காளர் திட்ட சாதனைகள் இத்தியாதிக் காரியங்களே.

அருமை நண்பர்களே! பேயோட்டுவதற்கும் தாயத்து எண்ணெய் விற்பனை செய்யவும் மோடி மஸ்தான்களும், சாலையோர சாமியார்களும் இருக்கிறார்கள். நோய்களை குணமாக்க மருத்துவ விஞ்ஞானம் அரும்பெரும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு சமூக நலத்துறை இருக்கிறது. குடிசைகளை கோபுரமாக்க குடிசை மாற்று வாரியம் செயல்படுகிறது. பொறியியற் கல்லூரிகளை நிறுவ கொங்கு வேளாளர்களும், குலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் பாவத்தின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்க இயேசு கிறிஸ்துவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? ஆகவே சுவிசேஷகர்களே, அவர் செய்த அந்த மாபெரும் தியாகத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம். மனிதனை ஆட்டிப் படைத்து அழிவுக்கு அழைத்துச் செல்வது பாவமே. அந்த பாவத்தின் நச்சுத் தன்மையை உணரமுடியாமல் மக்களின் கருத்தை பிசாசு குருடாக்கி விட்டான். (2 கொரி 4 : 4) அந்தக் குருட்டுத் தன்மை நீக்கப்பட்டு பாவத்தினால் வரும் கேடுகளை தெளிவாகப் பார்க்கும்படி அவர்களுக்குப் பிரகாசமான மனக் கண்களைத் தர வேண்டும் என்று மன்றாடி ஜெபியுங்கள் (எபே 1 : 19) அதற்கேற்ற சத்தியங்களைப் போதியுங்கள்.

"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1 தீமோ. 4: 8). அதாவது சரீர முயற்சி உலக சம்பந்தமான காரியங்களை மேற்படுத்த கொஞ்சம் உதவியாக இருக்கலாம். ஆனால் தேவபக்தியானது இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும் என்கிறார் பவுலடியார்.

சமூக சேவையா, இறைப்பணியா என்ற சவாலுக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த நிலை என்ன? ஆதித் திருச்சபையிலே ஒரு பிரச்சினை, கிரேக்க விதவைகள் சரியானபடி பராமரிக்கப்படவில்லை என்று ஒரு புகார் அப்போஸ்தலருடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த பதிலை அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் வாசியுங்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தை போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல.

ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

நாங்களோ, ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள் (அப். 6: 2-4)

சகோதரர்களே, அப்போஸ்தலருடைய ஆத்தும பாரத்தை சுவிசேஷம் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியத்தை, அவசரத்தைக் கவனியுங்கள்" அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று வேதனைப்பட்டு மனதுருகுகிறாரே நமது ஆண்டவர் (மத் 9: 23 - 37) இன்றைக்கு அதைவிட நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்தியாவின் 85 கோடி மக்களில் ஐந்து சத மக்களே கிறிஸ்துவை அறிந்திருந்தவர்கள். உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒரு முறை கூடக் கேள்விப்படாத கோடிக்கணக்கான மக்கள் இருக்கின்றனரே. அவர்களைப் பற்றி நம்முடைய பாரம் என்ன? "பணத்தை வாங்குவதற்கும் வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடு மாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குவதற்கும் இது காலமா? என்று எலிசா தீர்க்கதரிசி அவனுடைய பொருளாசை பிடித்த வேலைக்காரன் கேயாசியைக் கடிந்து கொண்டாரே, ஏன் என்று எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? பொருளாசை கர்த்தருடைய மகிமையை விழுங்கி விடும் என்பதனாலல்லவா? கேயாசிக்கு இருந்த சூழ்நிலைகளை விட நமக்கு இருக்கிற சூழ்நிலைகள் அதிக சாதகமானது. தேவனுடைய வசனம் நம்முடைய மொழியில் கடந்த காலத் தவறுகளையும் அதன் விளைவுகளையும் எழுதி வைத்திருக்கிறது. (ரோமர் 15-4) அப்படியிருக்க நானும் நீயும் வரம்பெற்றவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அதைவிட கடுமையான குற்றத்தைச் செய்வோமானால் வரும் கோபத்துக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்?

"தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்து ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின் படி செய்யாமலும், இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் (லூக்; 22 : 47) என்பதன் கருத்தை சிந்தித்துப் பாருங்கள்.

இயேசு நல்லவர் என்பதும் வல்லவர் என்பதும் யாருக்குத் தெரியாது? பிசாசுகள் செய்த அறிக்கையை நீங்கள் ஒரு நாளும் வாசிக்கவில்லையா?" - இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே....என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக் கொள்கிறேன்" (லூக் 8 : 28) "நசரேயனாகிய இயேசுவே.....எங்களைக் கெடுக்கவா வந்தீர். உம்மை இன்னார் என்று அறிவேன். நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்". (மாற்கு 1 : 24: லூக் 4 : 34) மேற்படி வசனங்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்றும் சத்துருவாகிய சாத்தான் அவருடைய வல்லமையை உணர்ந்திருந்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறதே.

மேலும் அவரை விசுவாசித்தால் போதும். நீ இரட்சிக்கப்படுவாய் என்ற போதனை சரியா? அப் 20 : 26 கூறுகிற தேவனுடைய முழு ஆலோசனை

இது தானா? அப்படியானால் யாக்கோபு நிருபம் கூறுகிற கீழ்க்கண்ட வசனங்களுக்கு என்ன பொருள்? 2-ம் அதிகாரம் 14-26 வாசித்துத் தியானியுங்கள்.

கர்த்தருடைய ஊழியர்களே, வீண் பெருமைக்கும், இழிவான ஆதாயத்துக்கும், பேருக்கும், புகழுக்கும், அலைவதை விட்டு விட்டு எளிமையாய், நேர்மையாய் ஆத்தும பாரத்தோடு கர்த்தரைச் சேவியுங்கள். இறைவன் அளிக்கும் எந்த வரமும் அவரை மகிமைப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட நன்கொடை. அதை உங்கள் புகழுக்கோ, செல்வாக்குக்கோ, நிதி திரட்டுவதற்கோ பயன்படுத்துவது மன்னிக்க முடியாத குற்றம். "அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்" என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவைத் தாளிடும் நிலைக்கு ஆளாகாதபடி திருந்தி நடவுங்கள் (மத் 7 : 21 - 23).

"வைத்தியர்களே உங்களை முதலில் குணமாக்கிக் கொள்ளுங்கள்" என்று கர்த்தரின் கடிந்து கொள்ளுதலுக்கு முதலாவது நாம் கீழ்ப் படிவோம், பின்னர் மற்றவருக்குப் பிரசங்கிப்போம்.

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரி 9 : 27) என அப்போஸ்தலன் பவுல் சொன்னது நமக்கும் பொருந்தும்.

**E.Z. செல்வநாயகம்**

## நினைவாக

திருமறை ஆசான் இதழின் நிறுவன ஆசிரியர்

**E.Z. செல்வநாயகம்** அவர்கள் பரம

இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.2003 உடன் 10

ஆண்டுகள் நிறைவுபெறுவதையொட்டி அவர் நினைவாக

இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

# இப்படி இருந்தால்....?

**வி**சுவாசமில்லாத உலகில் நாம் வாழ்கின்றோம். அநேகர், வானத்தையும், பூமியையும் தேவன் சிருஷ்டித்தார் என்பதை நம்புவதில்லை. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை அவர்கள் நம்புவதில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்றும் நம்புவதில்லை. பரலோகம், நரகம் பற்றிய நம்பிக்கையுமில்லை. மாறாக, பூமியில் இருக்கும் எல்லாவற்றுக்கும் பரிணாம வளர்ச்சியை காரணமாகச் சொல்லுகிறார்கள். தேவனுக்கும், கிறிஸ்தவத்திற்கும் மாற்றாக "கடவுளை மற - மனிதனை நினை" என்கிற கொள்கையை வைக்க முயற்சிக்கிறார்கள்.

தேவன் இல்லையென்றால், சிருஷ்டிகரில்லையென்றால், தேவகுமாரனுமில்லையென்றால், பரலோகம் நரகம் இல்லையென்றால், மற்ற எதுவுமே இல்லையென்றால், இவர்களுடைய அவிசுவாசம் பெரிதான ஒன்றாக இருக்காது. மிருகங்களைப் போல மனிதர்களும் மரணத்துடன் முடிந்தே போவார்கள். இதற்கு மாறாக, தேவன் என்று ஒருவரில்லை யென்றாலும், தேவனை விசுவாசிப்பதாலும், அத்தோடு சேர்ந்துவரும் எல்லா நன் நடக்கையாலும் இவ்வுலகமும், தனி மனித வாழ்வும் எவ்வளவு மேன்மையாக இருக்கும் என சிந்திப்பீர். ஒருவன் சிறந்தவனாக திகழ முடியும். இன்னும் நல்ல வாழ்க்கை வாழ முடியும். நமது வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும் எதிர்பார்ப்புமிருக்கும் அல்லவா? இவ்வுலகில் எப்பொழுதுமே மார்க்க ரீதியான ஒழுக்கத்திற்கும், மேலான வல்லமையின் நம்பிக்கைக்கும், அதிகாரத்திற்கு கீழ்ப்படிய வேண்டியதற்கான தேவை இருப்பதை நீங்களும் அறிவீர்கள் என நம்புகிறேன்.

ஆனால் இப்படி இருந்தால்? விசுவாசமில்லாதவர்களெல்லாம் தவறாக் இருந்தால்? தேவன் என்பவர் இருந்தால்? பூமியையும் அதன் நிறைவையும் அவர் சிருஷ்டித்திருந்தால்? ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்து, ஒவ்வொருவருக்கும் ஒரு ஆன்மாவை உண்டாக்கி யிருந்தால்? வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகயிருந்தால்? கிறிஸ்து தேவ குமாரனாகயிருந்தால்? மரணம் எல்லோருக்கும் வருமென்றும் நிச்சயமாகத் தெரியும்? மரணத்திற்குப் பின் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இருந்தால்? தேவ ஜனத்திற்கு பரலோகமிருந்தால்? துன்மார்க்கருக்கு நரகம் என்று ஒன்றிருந்தால்? அதுவும் பரலோகமும் நரகமும் நித்தியகாலமாக இருந்தால்? இப்படி இருந்தால் பின்ன என்ன செய்வது?

இவை எல்லாம் உண்மையாக இருந்தால் - நேர்மையாக உண்மையைக் கண்டறிய வேண்டுமென்பவனுக்கு போதுமான ஆதாரம் இருக்கிறது -

அப்படியானால் விசுவாசியாத யாவரும், கர்த்தருக்கு கீழ்ப்படியாத யாவரும், கர்த்தருடைய சபையின் அங்கமல்லாத அனைவரும் கிறிஸ்தவ வாழ்வை உண்மையாக வாழ்ந்து முடிக்காத யாவரும், நித்தய காலமாக அழிந்து போவார்கள். கிறிஸ்து சொன்னார், "என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான்.12; 48) என்று. துன்மார்க்கரைப் பற்றியும், நீதிமான்களைப் பற்றியும் கிறிஸ்து சொல்லும்போது, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும், கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடம், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். (II தெச 1: 7-10). பின்பு யோவான் எழுதும்போது, "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" என்கிறார். (2. யோவான்.9).

இன்றைய உலகிலிருக்கும் அநேக மதத்தினிலிருப்போரே, ஒரு வேளை அதுவெல்லாம் தேவனால் உண்டாகாததாக இருந்தால்? ஒருவேளை நீங்கள் அதை நம்பலாம், உங்கள் தெய்வங்களை ஆராதிக்கலாம், தியாக வாழ்க்கை வாழலாம், அவைகளுக்கு பலி செலுத்தலாம், இவைகளெல்லாம் செய்தும் உங்களுக்கு ஒரு இரட்சகரில்லையென்றால், நீங்கள் என்ன செய்திருந்தாலும் பயன் இல்லையே, உங்கள் பாவங்களை மன்னிக்க ஒருவருமில்லாததால், நித்தியத்திற்கும் எல்லாவற்றையும் இழந்தவர்களாவீர்கள்? வேதாகமம் சொல்லுகிறது, "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4; 4-6.).

கிறிஸ்துவை நம்பியிருந்தாலும் மனிதனால் உண்டாக்கப்பட்ட பிரிவினை சபையில் அங்கமாக இருப்பவர்களே! கிறிஸ்து ஒரே சபை கட்டியிருந்தால், கர்த்தருடைய நாமத்தை அது தரித்தருந்தால், கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவே சபையின் தலைவராகவும், தனது சரீரமாகிய சபைக்கு அவர் ஒருவர் மாத்திரமே கிறிஸ்தவ இரட்சகராகயிருந்தால் என்னவாகும்? (மத். 16; 18; ரோமர்.16; எபே.5; 23). சபை என்பது முக்கியமான ஒன்றாகயிருந்தால், பரலோகம் போவதற்கு நீங்கள் அதில் இருக்கவேண்டியதாக இருந்தால்? (மாற்கு.16; 16) கிறிஸ்து இரட்சிக்கப்பட்டவர்களை தன் சபையிலே மாத்திரம் சேர்த்திருந்தால்? (அப்.2; 47) என்னருகில் இப்பொழுது நீங்கள் இருக்கும் பிரிவினை சபையை பற்றி திருப்திபடலாம், "பாவிகளின் ஜெபத்தை" நீங்கள் செய்தால் போதும் பரலோகம் போக முடியும் என்று சொல்லும் பிரசங்கிகளை நீங்கள் நம்பலாம், சபை முக்கியமில்லாதது என்று எண்ணம். ஆனால், கர்த்தரை நியாயத்தீர்ப்பிலே நீங்கள் சந்திக்கும்போது, உங்கள் பிரசங்கிமார் சொல்லுவதை வைத்து நீங்கள் நியாயந்தீர்க்கப்பட போவதில்லை மாறாக தேவ வார்த்தையைக் கொண்டு நியாயந் தீர்க்கப்படுவீர்கள். (யோவான்.12; 48). ஆகவே உங்கள் ஆத்துமாவோடு விளையாட வேண்டாம்.

**இதோ சில உண்மைகள் ....**

1. வானத்தையும், பூமியையும் அதில் உள்ளவைகளையும் தேவன் சிருஷ்டித்தார் (ஆதியாகம். 1; 1).

2. இந்த உலகத்தில் வாழ்ந்து, மனிதனின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து, பரலோகத்தின் பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்று இந்நாள் வரை அங்கிருக்கிற கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறார். (யோவான். 3; 16, 17, 1. கொரி. 15; 1-4).

3. வேதாகமம் தேவ ஆவியினால் எழுதப்பட்டதாயிருக்கிறது. அது தேவனுடைய மனுஷன் எல்லா நற்கிரியையும் செய்ய தகுதிப்படுத்துகிறது. (2. தீமோ. 3; 16, 17),

4. கிறிஸ்து தமக்கு கீழ்படிகிறயாவரையும் இரட்சிப்பதாக வாக்கருளியிருக்கிறார் (எபே. 4; 4-6, 5: 23) எல்லாரும் மரிப்பார்கள், கர்த்தரால் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (எபி. 9; 27; அப்.17; 30,31). நீதிமான்கள் தேவனோடு என்றென்றும் வாழும்படி பரலோகம் செல்வார்கள். (மத். 25; 46 வெளி. 22; 14). துன்மார்க்கரை அக்கினி கடலில் தள்ளுவார். என்றென்றும் தண்டனையை அனுபவிப்பார்கள். யோவான் சொல்லும்போது, "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவை களின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக

நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி. 20; 12-15).

ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும்? சந்தேகத்தினாலும், அவிசுவாசத்தினாலும் நம்முடைய ஆத்துமாவை பணயப் பொருளாக வைக்கலாமா? அல்லது பாதுகாப்பான பாதையில் செல்லலாமா? பூமியையும், அதில் உள்ள எல்லாவற்றையும் பார்த்த பிறகும் நாம் தேவன் இல்லை என்ற முடிவுக்கு எப்படி வருவது? நாம் ஞானமுள்ளவர்களாக இருக்கிறோம், ஆத்துமாவை ஆதாயம் செய்ய முயற்சிக்கிறோம் என்பதே தேவன் ஒருவர் உண்டு என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. இது இப்படி இருந்தால், நாம் அவருடன் இன்னும் கிட்டிச் சேர என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய வேண்டும், நமக்காக தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு அதை கடை பிடிக்க வேண்டும். நாம் அப்படிச் செய்வதால் இழப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாவற்றையும் நாம் ஆதாயப்படுத்துகிறவர்களாக இருப்போம். ஆனால் அவிசுவாசத்தின் பாதையை தேர்ந்தெடுத்தால் எல்லாம் இழப்புத்தான்!

**- J.C. Choate**

# ஜெபம்

நம்முடைய ஆண்டவர் நமது ஜெபத்தை கேட்டு பதில் கொடுப்பதில் ஒருபோதும் குறைவைப்பதில்லை. நாம் தான் கேட்பதில் குறைவைக்கிறோம்.

உதட்டிலிருந்து வருவது மனப்பாட ஜெபம்
உள்ளத்திலிருந்து வருவது உண்மையான ஜெபம்.

நம்முடைய பிரச்சனைக்கும் அதன் தீர்வுக்கும் எவ்வளவு தூரம் தெரியுமா?

நம்முடைய முழங்காலுக்கும் தரைக்கும் உள்ள தூரமே.
ஆகவே முழங்கால்களை மடக்குவோம். ஜெயம் பெறுவோம்.

# "நம் குடும்பத்தில் இயேசு"

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது சில குடும்பங்களுக்கு விருந்தாளியாகச் சென்றார்.

1. சீமோன் பேதுரு. அந்திரேயா வீடு (மாற்கு.1; 29-31)
2. யவீருவின் வீடு. (மாற்கு. 5; 22-41)
3. பெத்தானியாவின் வீடு ( லூக்கா. 10; 38-43)
4. சகேயுவின் வீடு (லூக்கா. 19; 1-10).

மேற்கண்ட நான்கு குடும்பங்களும் மாற்குவில் இருந்து இரண்டும், லூக்காவிலிருந்து இரண்டுமாக பல நல்ல, கருத்துக்களால் பின்னிப் பிணைந்து உள்ளது. இந்த நான்கு குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் பரிசுத்த தேசமாகிய பாலஸ்தீனாவின் வடக்கில் உள்ள கலிலேயாவிலும் மற்ற இரண்டும், தெற்கு முனையில் உள்ள யூதேயாவிலும் அமைந்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் இவர் வரவழைக்கப்பட்டார். கலிலேயாவின் வடமேற்கு எல்லையில் கரையோரத்தில் அமைந்திருந்த தங்கள் ஏழ்மையான வீட்டிற்கு தங்கள் அன்பான எஜமா-னின் வருகையை எண்ணி சீமோன் பேதுருவும், அந்திரேயாவும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்தனர். மரணத் தருவாயில் இருக்கும் தன் மகளை குணமாக்கும்படி யவீரு இயேசுவை வருந்திக் கேட்டுக் கொண்டான். பெத்தானியாவில் உள்ள மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசுவுக்கு எப்போதுமே மனமார்ந்த வரவேற்பு கிடைத்தது. ஆயக்காரருக்குத் தலைவனாயிருந்தவன் வீட்டிற்குத் தானாக சென்று தங்க வேண்டும் என்று எண்ணினார்.

இயேசு கிறிஸ்துவுக்கு சகேயுவிடமிருந்து பெரிதாக ஒன்றும் உயர்ந்த வரவேற்பு கிடைத்தது என்று நாம் கூறிவிடமுடியாது. இயேசு தாமாக இந்த வீடுகளுக்கு அழையா விருந்தாளியாகச் செல்லவில்லை. அழைத்தவர்களும் உள்ளே வெறுப்பை வைத்துக் கொண்டு வெளியே உபசரிப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்துடனும் அவரை உபசரிக்கவில்லை. தங்களுடைய ஏழ்மையான வீடுகளில், தேவ குமாரனை தெய்வீக விருந்தாளியாக ஏற்றுக்கொண்ட விஷயத்தில், எண்ணத்திலும், செயலிலும் தங்கள் மகிழ்ச்சியை காட்டினார்கள். தம்மை

விரும்பாத, வரவேற்காத வீடுகளுக்குச் சென்று இயேசுக்கிறிஸ்து நீண்ட நேரம் தங்கினதே இல்லை. லூக்கா 4ம் அதிகாரத்தின்படி அவர் நாசரேத்திலிருந்து வெளியேறினது, மாற்கு 5ம் அதிகாரத்தில் உலக ஆசை பிடித்த கதரேனரிடமிருந்து வெளியே வந்தது ஆகிய இரண்டும் இதற்கு தக்க சான்றுகள் ஆகும். வெளிப்படுத்தல் 3; 14-22 ஆகிய வசனப்பகுதிகளில் பார்த்தால், இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த சபையிலே உள்ளவர் கூட குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் அவர்களை வாந்தி பண்ணிப் போடுவேன் என்கிறார். முடிவாக, என்னவென்றால் இயேசுவை நாம் அழைத்தாலேயொழிய அவர் வந்து நம் வீட்டில் வாசம் பண்ண மாட்டார்.

மேலே கண்ட வீடுகளில் உண்மையாகவே தேவைகள் இருந்தது. பேதுரு, அந்திரேயா வீட்டில் பயங்கரமான சுகவீனம் இருந்தது. மாற்கு ஆசிரியர் சொல்லும்போது பேதுருவின் மாமி ஜுரமாயிருந்தாள் (மாற்கு. 1; 30) என்கிறார். லூக்கா ஆசிரியர் ஒரு வைத்தியனாக இருந்து கொண்டு அதை "கடும் ஜீரம்" (லூக்கா.4; 38) என்கிறார். அதே வசனத்தில் "அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள்" என்று வாசிக்கிறோம். இந்த மாதிரி கரிசனை அவர்களுக்கிடையே இருந்த அன்பு, பாசப்பிணைப்பு, இரக்கம், ஈவு இவைகளை வெளிப்படுத்துகிறது. இதைத்தான் இன்று நாமும் எதிர்பார்க்கிறோம். இயேசுவை தங்கள் வீட்டிற்கு அழைக்கும் குடும்பங்கள் பொதுவாகவே பல தகுதியான குணங்களை பெற்றிருக்கும். இரண்டாவது வீடான யவீருவின் வீட்டில் சுகவீனம் மரணத்தை ஏற்படுத்தியது. உண்மையாகவே யவீருவின் வீட்டில் ஒரு தேவை இருந்தது. அதைப் போலவே, ஜீவனுள்ள வார்த்தைகள் பேசப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் பெத்தானியாவின் குடும்பத்தில் இருந்தது. தேவ சித்தத்தை நிறைவேற்றினதேயல்லாமல் வேறு வேலையை அவர் செய்யவில்லை. மத். 7; 37-ல் "எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்" என்று அவர் புகழப்படுகிறார். ஆச்சரியப்படப்படுகிறார். எல்லாத் தேவைகளைக் காட்டிலும் சகேயுவின் வீட்டில் இரட்சிப்பின் தேவை இருந்தது. அநியாயமாய் வாங்கினதை திரும்பச் செலுத்தினான். நான்கு வீடுகள், ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தேவையில் இருந்தது.

இயேசு கிறிஸ்து ஆசீர்வாதத்தை சுமந்து கொண்டு நம்முடைய வீடுகளுக்கு வர இருக்கிறார். தெய்வீக விருந்தாளியாக அவர் வெறுங்கையோடு வருவதில்லை. இந்த உலகமே கொள்ளாத அளவு

ஐசுவரிய களஞ்சியம் அவருக்கே சொந்தமானது. ஒவ்வொரு வீட்டிற்கும் அவர் ஓர் ஆசீர்வாதமாக மட்டும் வரவில்லை, யார் யாருக்கு எந்த ஆசீர்வாதம் மிகத் தேவையோ அதைக் கொண்டு வருகிறார். சீமோன் வீட்டிற்கு அவர் மா மருத்துவராக, வந்தார். அவருடைய வருகையால் அக்குடும்பத்தில் அதிகம் நேசிக்கப்பட்ட அம்மாளுடைய சுகவீனம் நீங்கினதோடல்லாமல், மற்றவர்களும் ஆறுதல் அடைந்தார்கள். யவீருவின் வீட்டிற்கு உயிர்த்தெழுதலையும், ஜீவனையும் கொடுக்கிறவராக வந்தார். தன் ஒரே மகள் மரித்துப் போன போது, இயேசுவானவர் அவளோடிருந்தது எவ்வளவு பாக்கியமான நிலையென்று பாருங்கள். நீங்களும், நானும் பல முறை இம்மாதிரி சம்பவங்களில் என்ன செய்வது, சொல்வது என்று அறியாமல் இருக்கிறோம். ஆனால் மனிதனை சிருஷ்டித்த அவர் நம்முடைய தேவைகளை சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார். இரண்டு வார்த்தைகளை அவர் உதிர்க்கிறார், "பயப்படாதே, விசுவாச முள்ளவனாயிரு" (மாற்கு.5; 36). மனிதர்கள், கதை கதையாக வார்த்தைகளால் பேசலாம். இயேசு கிறிஸ்து இரண்டே வார்த்தைகளில் ஆறுதல் படுத்துகிறார்.

மரியாளின் வீட்டில் இருந்து தம்முடைய அற்புதமான ஜீவனுள்ள வசனங்களை போதித்துக் கொண்டிருந்தார். அதனுடைய மதிப்பு அவளுக்குத் தெரிந்திருந்தது. ஞானி சாலமோன் கூறும்போது, "ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித் தட்டில் வைத்த பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி 25; 11). எவராவது ஒருவர் ஏற்ற வார்த்தைகளைப் பேசியிருப்பரானால், அது தேவனுடைய குமாரனாகத்தான் இருந்திருக்கும். ஏக்கத்தோடு இருந்த மரியாளின் இருதயத்திற்கேற்ற வார்த்தைகளை இயேசு பொழிந்தருளினார். முதலாம் நூற்றாண்டிலே எப்படி சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுத்த இரட்சகராயிருந்தாரோ, அதே இரட்சகர் தான் இன்றும் நம் வீட்டிற்கு இரட்சிப்பை கொடுக்க முடியும்.

இயேசு இந்த நான்கு வீட்டை விட்டு போகும்போது, அவர்கள் முன்னிலையைக் காட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சுகம், ஜீவன், வார்த்தை, இரட்சிப்பு நான்கும் கிடைத்தது. நான்கு வீடுகள், நான்கு சந்திப்புகள், நான்கு ஆசிர்வாதங்கள்.

இன்றைக்கும் நாம் இயேசுவை நம் வீட்டிற்கு அழைத்து அவர் கூறிய வார்த்தைகளின்படி செய்வோமானால், அவரும், அவருடைய

# ஒரு குறை போதும்..

1. கிறிஸ்துவுக்காக துன்பப்பட்டாலும் அதில் அன்பு, இல்லையென்றால் அது வீண். (வெளி. 2; 3)
2. கள்ளப் போதகத்தைத் தடுத்தும், வெறுத்தாலும் அன்பு இல்லையென்றால் அது வீண் (வெளி. 2; 2)
3. உலகத்து காரியங்களை வெறுத்தாலும் அன்பு இல்லையென்றாலும் அது வீண் (வெளி 2; 3)
4. கர்த்தருடைய ஊழியத்தை சோர்ந்து போகாமல் செய்தாலும் அன்பு இல்லையென்றால் அது வீண் (வெளி. 2; 2).
5. கிறிஸ்தவ ஜீவியத்தில் அன்பு இல்லையென்றால் அது கிறிஸ்தவ ஜீவியமேயில்லை (வெளி. 2; 4).

வார்த்தைகளும் நம்மை உயர்த்தும். வார்த்தைகள் என்று சொல்லும்போது கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கப்போகிறதான வசனம் என்னும் வார்த்தைகளை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவம் போக ஞானஸ்நானத்தின் மூலம் கழுவப்படுவோமானால் நாம் இரட்சிக்கப்பட்டு இயேசு நம்மை அவருடைய சபையில் சேர்ப்பார். ஒருவேளை நாம் அவருடைய சபையில் அங்கமாக இருப்போமானால் என்னென்ன காரியங்கள் செய்யப் பட வேண்டும் என்று வசனம் சொல்லுகிறதோ அதை செய்வோம். அப்போதுதான் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உண்மையாகவே நம் குடும்பம் இரட்சிக்கப்படவேண்டும். மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். கணவனுடைய குணத்தினாலும், மனைவியினுடைய பரிசுத்தத்தினாலும் நன்மையான காரியங்கள் குடும்பத்தில் கிடைக்க வேண்டும். இவை எப்படி கிடைக்குமென்றால் நம் குடும்பத்தில் இயேசு இருக்க வேண்டும். ஆமென்.

**R.R. Nayagam.**

# ஏனோ மறைத்து விட்டார்...?

காலை முதல் கருக்கல் வரை உஷ்ணத்தை உமிழ்ந்த செங்கதிரோன், தன் வெப்பத்தைத் தணிக்க கடலுக்குள் சென்றால் அதை பகலவனின் மறைவு என்கிறோம். மனிதனாய் பிறந்து, மண் மேல் நடந்து, காலம் முடிந்ததால் மண்மூடிக் கொள்ளும்படி தன் கண் மூடிக் கொண்டால் அதை மனிதனின் மறைவு என்கிறோம். படை பலத்தால், கொடை குணத்தால், பாராண்ட பல ராஜ்ஜியங்கள் இன்று பூமிக்கடியில் புதைந்து மறைந்து கிடக்கிறதே அதை சாம்ராஜிய மறைவு என்கிறோம். நியூயார்க் நகரை அடையாளங் காட்டிய, இரட்டை கோபுரம், மண் மேடாக மறைந்தே போனதே அதை என்னவென்று சொல்வது. இப்படி மறைவு என்றாலே அதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் மறைந்தது மீண்டும் தெரியாதா! என்ற ஏக்கமும் உண்டாக்கும்.

ஏகாதிபத்திய நாடாகிய எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் சாமார்த்தியனான மோசேயின் சமாதி எந்த இடத்திலிருக்கிறது என்பதை வேதம் மறைத்திருக்கிறது. ஜகத்தின் ஜனங்கள், சாத்தானின் ஜாலங்களால் ஜீவனை, இழந்து போகக் கூடாது என்பதற்காக மனித ஜனனம் கொண்ட ஜீவாதிபதியாகிய இயேசுவின் பிறந்த நாளை விவிலியம் விளம்பாமல் மறைத்திருக்கிறது. விபச்சாரத்தால் மாசுபடிந்த மங்கையை, யூதமார்க்கத்து முன்னவர்கள் சிலர் இயேசு மன்னவரிடம் கொண்டு வந்தபோது, "பாவம் இல்லாதவன் கல் எறியக்கடவன்" என உலகம் போற்றும் உத்தம வார்த்தைகளை உதிர்த்த மன்னிப்பின் வேந்தன், குனிந்து மண்ணிடை கீறினதென்ன என்பது எழுதப்பட்ட மண்ணுக்கும், விண்ணுக்கும் மாத்திரமே தெரியுமல்லவா! இப்பொழுது நீங்களும், ஆம்! மறைக்கப்பட்டதை அறிந்து கொள்ள ஆவலும், தெரியவேண்டும் என்ற ஏக்கமும் உண்டாவது உண்மைதான் என்ற கருத்துக்கு ஒப்புதல் தருவீர்கள் என்று திடமாக நம்புகிறேன். ஆனால் மறைக்கப்பட்டது மன்னவருடையது என்பதையும் நாம் அறிந்திடல் நன்று. (உபா. 29; 29).

## மறைக்கப்பட்டவனின் மாண்பு

இஸ்ரவேலில் மன்னராட்சி மலர்ந்தது, முதலரசனாகிய சவுலுக்குப்பின், ஈசாயின் இளைய குமாரன் அரியணை ஏறினான், தாவீது என்கிற

இவ்வேந்தனுக்கு அப்சலோம் என்கிற மைந்தனிருந்தான். அப்சலோம், தன் சாதுர்யமான பேச்சினால், அரசியல் சதுரங்கத்தில் தாவீதுக்கு எதிராக காய்களை நகர்த்தினான். அரியணையை அபகரிக்க வேண்டுமென்ற ஆசையை தனக்குள் அணைகட்டி வைத்துவிட்டு அதற்கு ஆயத்த வேலையாக, பட்டணத்து வாசலுக்கு ஓரத்திலே நின்றுகொண்டு நியாயத்திற்காக வருபவர்கள் மேல் பாச மழை பொழிந்து, முத்தமிட்டு, கனிவான வார்த்தைகளின் மெல்லிய சத்தமெழுப்பி, இஸ்ரவேல் ஜனங்களின் இருதயத்தை கவர்ந்திழுத்தான். பட்டை தீட்டப்பட்ட பயங்கரத் திட்டம் நிறைவேறிற்று. அதன் விளைவு - தாவீது ராஜா தீவிரமாக தலைநகர் எருசலேமை விட்டு கால்நடையாய்க் கடந்து போனான்.

பொறாமை குணம் கொண்ட சவுலுக்குத் தப்பி காட்டுக்குள் சஞ்சரித்த முன் அனுபவம் தாவீதுக்கு இளம்வயதிலேயே நிரம்ப உண்டு. ஆனால் தன் வாழ்க்கையின் இப்பகுதியில் சொந்த மகனால் மீண்டும் தனக்கிப்படியோர் அனுபவம் கிட்டுமென கனவிலும் இவன் நினைத்திருக்க வாய்ப்பில்லை என நம்புகிறேன். தந்தைக்கும், தனயனுக்கும் பகை, இஸ்ரவேல் தேசமெங்கும் போர் மேகம் சூழ்ந்ததை தாவீது அடையாளம் கண்டு "யோவாபையும், அபிசாயையும், ஈத்தாயையும் நோக்கி; பிள்ளையாண்டனாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய், நடப்பியுங்கள் என்று கட்டளையிட்டான்; இப்படி ராஜா அப்சலோமைக் குறித்து அதிபதிகளுக்கெல்லாம் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லோரும் கேட்டிருந்தார்கள்" (2. சாமு. 18; 5) பின்பு இஸ்ரவேலைச் சூழ்ந்த போர் மேகம் கார்மேகமாகி, வீரர்களின் வாள் மோதிக் கொண்டதில் மின்னல்கள் தெறித்து, இரதங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதால் இடி முழங்கி, மாரி காலத்து மழைத்துளியாக அம்புகள் அங்குமிங்கும் அனலாய் பறந்து நாடெங்கும் யுத்த மழை பொழிந்தது.

காட்டுக்குள் நடந்த இக்கடும் யுத்தத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன் முறிய அடிக்கப்பட்டார்கள், அனுபவமின்மையால், பட்டயம் பட்சித்ததைப் பார்க்கிலும் காடு பட்சித்த ஜனம் அதிகமாயிருந்தது என்று விவிலியம் விளம்புகிறது (2. சாமு. 18; 8) இந்த சூழ்நிலையில்தான், அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்பட்டான், கோவேறுகழுதை கர்வாலிமரத்தின் கீழ் வந்ததினால், இவனின் கபாலம் கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டது. இதை கண்ட ஒருவன் அதை

யோவாபுக்கு அறிவித்தான். "அப்பொழுது யோவாப் தனக்கு அறிவித்தவனை நோக்கி; நீ அதைக் கண்டாயே; பின்னை ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப் போடவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக்காசையும் ஒரு கச்சையையும் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருப்பேனே என்றான்" (1. சாமு. 18; 11).

வாலிபர்களே! இப்பொழுது தான் உங்கள் கண்களை அகலமாக்கி, கருத்தறையின் கதவுகளை விரிவாய் திறக்க வேண்டும்! யோவாப் சொன்னதைக் கேட்டவன் கொடுத்த மறுமொழியை வேதத்தின் வார்த்தைகளாலே எழுதுகிறேன் வாசியுங்கள், "அந்த மனுஷன் யோவாபை நோக்கி: என் கைகளில் ஆயிரம் வெள்ளிக்காசு நிறுத்திக் கொடுக்கப்பட்டாலும், நான் ராஜாவினுடைய குமாரன் மேல் என் கையை நீட்டமாட்டேன்; பிள்ளையாண்டானாகிய அப்சலோம் நீங்கள் அவரவர் காப்பாற்றுங்கள் என்று ராஜா உமக்கும் அபிசாய்க்கும் ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக் கட்டளையிட்டாரே" (1. சாமுவேல். 18; 12). என்று மிக யோக்கியமான யோசனையைச் சொன்ன யோவாபின் கன்னத்தில் அறைவதைப் போல பதில் சொன்னான். விலை கொடுத்து என்னை வாங்கப் பார்க்கிறீரோ! நீர் கொடுத்த விலையில் நூறு மடங்கு கொடுத்தாலும் சரி, ராஜகட்டளையை மீறமாட்டேன் என்ற கொள்கைக்காக நிற்கும் என் எண்ண உறுதி மாறுமென்ற, தாறுமாறான எண்ணம் உமக்கிருந்தால் அதை வேரோடு அழித்து விடும் என்பதுதான் நெஞ்சுரம் கொண்ட இவனின் நேர்மையான பதில்.

II. சாமுவேல், 18: 12வது வாக்கியத்தில், "அந்த மனுஷன்" என்று இவனைப் பற்றி வேதம் விளம்புகிறது. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வேதம் இவனை "மனுஷன்" என்று அழைக்கிறதை காண்கிறோம். கொள்கையை அடமானம் வைக்காத, ராஜாவின்கட்டளையை அவமதியாத இவனைப் பார்த்து "மனுஷன்" என்று அழைப்பது நியாயம்தானே. யோவாப்பிடம் தான் விலைபோகமாட்டேனென்று சொல்வதால், இராஜ குமாரனையே, ராஜ கட்டளையை மீறி கொன்று போட நினைக்கும் இந்த யோவாப் தன்னையும் தலையில்லா முண்டமாகக் கூட தயங்க மாட்டான் என்று இவன் நினைக்க வாய்ப்புண்டு. அந்த நினைவின் மத்தியிலும் கொள்கையை விட்டுக் கொடுக்காத, விலை போகாத இந்த மாமனிதனை வேதம் "மனுஷன்" என்று அழைப்பதின் மாண்பு புரிகிறதா! இவன் "மனுஷன்" தான், ஆம், "காசு" என்று கேட்ட உடன், ஆசையை தூசாகத் தன் மனதில் படிய விடாததினால் இவன் "மனுஷன்" தான்,

"கச்சை" தருகிறேன் என இச்சை காட்டிய யோவாவுக்கு தான் பிச்சைக்காரனல்லன் என புரியவைத்த இவனை "மனுஷன்" தான் என்று நீங்களும் என்னோடு ஒப்புவீர்கள் என நம்புகிறேன்.

வாலிபர்களே! இதற்கே உங்கள் புருவம் உயர்த்தினால் எப்படி! இவன் யோவாபுக்கு சொன்ன பதிலின் பாதியைத் தானே இதுவரைக் கண்டிருக்கிறீர்கள் மீதியையும் உங்கள் முன் வைக்கிறேன் கண்டு மதிப்புரையை உங்கள் நெஞ்சில் பதிப்புரை ஆக்கிடுக. "ராஜாவுக்கு ஒரு காரியமும் மறைவாயிருக்கமாட்டாது; ஆதலால், நான் அதைச் செய்வேனாகில், என் பிராணனுக்கே விரோதமாகச் செய்பவனானேன், நீரும் எனக்கு விரோதமாயிருப்பீர் என்றான்" (2. சாமுவேல். 18; 13) அரியணையின் படிகள் சறுக்கி, ஆட்சியை இழந்து, அப்சலோமினால் துரத்தப்பட்ட அரசனுக்கே மறைவானது ஒன்றும் இல்லை என்றால், ராஜாக்களை ஏற்படுத்துகிற வல்லமையும், அவர்களை ஒரு நொடியில் தள்ளுகிற பராக்கிரமமும் நிறைந்த பரலோக தேவனுக்கு எல்லாம் தெரியுமா தெரியாதா? நிச்சயம் தெரியும். யூதாவின் அரச கட்டளையை மீறுவதே தன் பிராணனுக்கு விரோதமான செயல் என்று இந்த "மனுஷன்" நினைத்திருக்கிறான் என்றால் யூதாவையும், அவன் தகப்பனையும் கரு முதல் கண்ட கர்த்தருக்கு விரோதமாக செய்வது! ஐயகோ நினைப்பதற்கே நெஞ்சு நடுங்குகிறது. சில சமயங்களில் வேதாகமம் முழுவதையும் வைத்திருக்கிற நாம் கூட இத்துணை ஆழமாக காரியங்களை புரிந்து கொள்வதில்லை. அப்படியே புரிந்து கொண்டாலும், தன்நலம் தலைதூக்கும் போது "கொள்கை" "தெய்வ பயம்" இவை எல்லாம் பரிதி முன் பனி போல் விலகி ஓடிப் போகிறது. திண்ணிய நெஞ்சம் கொண்ட இவன் நம்முன் எப்படி நிமிர்ந்தெழுந்து நிற்கிறான் பாருங்கள். பார்ப்பதோடு நிறுத்திவிடாதீர்கள், கொஞ்சமாவது அவனை பின்பற்றவும் நாடுங்கள்.

பிள்ளை பாசம் அறியாத இரும்பிதயம் படைத்த யோவாபுக்கு இவன் தரும் இன்னும் ஒரு சாட்டையடியை பாரீர். "நீரும் எனக்கு விரோதமாயிருப்பீர்" என்றான். சூழ்நிலைக்கு தகுந்தபடி நிறம் மாறும் பச்சோந்தி குணம் படைத்தவன் அல்லவா நீர்! யோவாபே உம் நாக்கு, எனக்குத் தெரியும் அதன் புரட்டுப் போக்கு! நிலைக்காது என்மீது நீர் செய்யும் இந்த விலைத் தாக்கு! இப்பொழுது இப்படிப் பரிசு தரும் உம் நாக்கு, நான் அரச குமாரனை கொன்றிருந்தால் தரிசு நிலமாக என்னை மாற்ற ஆணையிடும் என்பது என் வாக்கு என்பதை நீர் உணர்வீர் என யோவாபின் முகத்திரையை கிழித்து காண்பிக்கிறான். இனியும் இவனிடம்

## யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷமும் - ஏழும்

1. 7 சபைக்கு 7 கடிதம்
2. 7 நட்சத்திரமும் 7 குத்து விளக்கும்
3. 7 ஆவிகள் 7 விளக்குகள்
4. ஆட்டுக்குட்டியானவருடைய 7 கண்களும், 7 கொம்புகளும்
5. 7 இடிகள்
6. 7 கோபாக்கினையின் பாத்திரம்
7. பூமியிதிர்ச்சியிலே கொல்லப்பட்ட 7,000 பேர்
8. 7 தலைக்கும் 7 கிரீடம்
9. 7 தலைகளுடன் கடலிருந்து எழுந்து வந்த மிருகம்
10. 7 தலை, 7 மலை, 7 ராஜாக்கள்

நிற்குமா, இரு நாக்கு கொண்ட இந்த யோவாப். ஆதவன் உதயத்தால் காரிருள் ஓடுவதைப் போல ஓடினான். மூன்று வல்லயங்களை எடுத்தான் தன் சதியை நிறைவேற்ற அதை உயிரோடு தொங்கிய அப்சலோமின் நெஞ்சிலே குத்தினான் (1 சாமுவே. 18: 14).

யோவாப் என்னும் இவனை பிசாசின் மொத்த உருவமென்றால் அது மிகையாகாது. பிசாசும் தான் காட்டிய ஆசை வலையில் ஒருவன் மாட்டிக் கொண்டால் 3 வல்லயங்களை அதாவது கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்கிறவைகளை எடுத்து நம் நெஞ்சிலேயே குத்தி வீழ்த்துவான். அதைப்போலவே இவனும் இந்த படுபாதகச் செயலை பதற்றமின்றி செய்து முடித்தான். இவன் மாத்திரமா! இல்லையில்லை! இவனைப் போலவே இவனது பத்து சேவகர்களும் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக் கொன்று போட்டார்கள். இவர்களும்தானே ராஜகட்டளையையும், யோவாபோடு, அந்த "மனுஷனின்" உரையாடலையும் கேட்டிருப்பார்கள். ஆயிரம் நட்சத்திரங்கள் வானில் இருந்தாலும் ஒளிப்பிழம்பாக பவனிவரும் நிலவைப் போல இந்த இழிங்கர்களின் மத்தியில் இவன் என்றும் பவனிவருவான் என்பது உண்மை. இப்படிப்பட்ட மா மனிதனின் பெயரை சர்வஞானம் கொண்ட பரிசுத்த ஆவியானவர் ஏனோ மறைத்து விட்டார்!

**ஜே. பிக்கின்ஸ்.**

# II கொரிந்தியர் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர்** : அப்போஸ்தலனாகிய பவுல்

**காலம்** : சுமார் கி.பி. 56–57


## இந்நூல் பற்றி...

1. தீத்துவிடமிருந்து ஆறுதலான செய்தியைப் பெற்றுக்கொண்ட பவுல், கொரிந்தியரை மெச்சி இக்கடிதத்தை எழுதியுள்ளார் (2. கொரி. 7; 6,7).
2. இருப்பினும் கொரிந்துவில் இவருடைய அப்போஸ்தலத்துவத்தைக் கேள்வி கேட்பவர்களும் இருந்தனர். அவர்கள் பவுலின் செயல்பாட்டைக் குறை கூறினர்.
3. அவரைத் தடுமாறுகிறவரென்றும், நம்பத் தகுந்தவர் அல்ல என்றும் (1; 15-24) பேச்சுத் திறன் குறைந்தவரென்றும் (2. கொரி. 11; 5,6) பண உதவியை தட்டிக் கழித்தபடியால், தன்னுடைய வேலையில் நம்பிக்கையற்றவரென்றும் (2. கொரி. 11; 7-10) உண்மையில் அவர் ஒரு அப்போஸ்தலன் அல்ல என்றும் (2. கொரி.12; 11, 12) நேர்மையற்றவரென்றும் குறைபட்டுக் கொண்டனர். (12; 17,18).
4. இந்நூலின் முதல் பகுதியில் (1-7 அதி) கொரிந்து சபையினிமித்தம் மனம் மகிழ்கிறார். ஏனெனில், முதல் நிருபத்தினிமித்தம், பெரும்பாலனவர்கள் மனம் மாறி விட்டனர்.
5. இரண்டாம் பகுதி, தேவையிலிருப்பவர்களுக்கான காணிக்கை பற்றியும் (8,9 அதி) தன்னுடைய அப்போஸ்தலத்துவம் பற்றியும், பேசுகிறார். (10-13 அதி).
6. இந்நூல் நோக்கம், பவுலுடைய அப்போஸ்தலத்துவத்தை நிலை நிறுத்தும்படியான நோக்கம் கொண்டு எழுதப்பட்டது.
7. இந்த நிருபம் மக்கெதொனியாவிலிருந்து எழுதப்பட்டிருக்கலாம்

## இந்நூலின் செய்தி...

1. சபையின் ஐக்கியத்திலிருந்து பாவியை விலக்குவது, அவன் மனந்திரும்ப வேண்டுமென்பதற்காகவே. ( 2: 6–11, கலாத்தியர். 6; 1, 2).
2. தேவனுக்கேற்ற துக்கம் உண்மையான மனந்திரும்புதலுக்கு வழிவகுக்கும்.
3. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடவேண்டும் (8: 21).
4. கள்ளப் போதகர்கள், வஞ்சனையும், ஆபத்தும் நிறைந்தவர்கள் என்பதைக் கூறுகிறது (2. கொரி.11; 23-33).

# "காணாமற் போனது, கண்டுபிடிக்கப்பட்டது"



நமதாண்டவராகிய இயேசுவால் மிகவும் அதிகமாக நேசிக்கப்படும் தம்பி, தங்கைகளே! உங்கள் அனைவருக்கும் உயர்ந்தவரின் உன்னத நாமத்தில் வாழ்த்துக்கள்.

நன்மை செய்கிறவராக நமதாண்டவர் இப்பூமியில் நடந்து திரிந்த போது, தம்மைப் பின்பற்றிய திரளானவர்களுக்கு உவமைகளைக் கொண்டு அநேக காரியங்களை எடுத்துரைத்தார். அவரின் உவமை பாணி உபதேசம் முக்கியமான பாடங்களைக் கொடுத்தது. அந்த உவமைகளில் ஒன்று, "காணாமல் போன ஆடு" பற்றியது. (லூக். 15 ; 3-7).

ஒரு மனுஷனுக்கு மந்தையில் 100 ஆடுகள் இருந்தது. நம்முடைய நாட்களில், பள்ளி செல்லும் நம்மைப் போன்ற சிறுவர்கள் காணாமல் போவது போல், அவைகளில், ஒன்று தொலைந்து போய் விட்டது. மிகவும் கவலை யுற்ற அந்த மனிதன், மற்ற 99 ஆடுகளைப் பத்திரமாக ஓர் இடத்தில் விட்டுவிட்டு, காணாமற் போனதைத் தேட ஆரம்பித்தார். அங்குமிங்கும் அலைந்து, கடை சியில் அதைக் கண்டுபிடித்தபோது; அதைத் தன் தோள்களின்மேல் போட்டு கவனமாகக் கொண்டு வந்து சேர்த்தான். மிகவும் மகிழ்ந்து போன அவன், தன் நண்பர்களை யெல்லாம் கூட்டிச் சேர்த்து, "காணமற் போன இந்த ஆட்டுக் குட்டியை நான் கண்டுபிடித்தேன்" என்று கூறினான்.

சிறுபிள்ளைகளாகிய நமக்குக் கூட விளங்கும் இந்த அழகான உவமையைக் கொண்டு, நம் இயேசுவானவர், ஓர் அருமையான பாடத்தைத் தருகிறார். அது, காணாமற் போன அந்த ஆட்டுக் குட்டியைப் போன்றுதான், தேவனி டத்திலிருந்து இழந்து போகும் மனிதனும் இருக்கிறான் என்று கூறுகிறார். ஒரு மனிதன் பாவம் செய்யும் போதும், தன்னையும் தன் உபதேசத்தையும் விட்டு விலகும் போதும் நம்முடைய பரலோகத்தின் தகப்பன் மிகவும் கவலைப்படுகிறார். ஆனால், தேவனுடைய சமூகத்திலிருந்து விலகி, பாவங்களுக்குள் சிக்கி காணாமல் போகும் மனிதன், பாவ மன்னிப்புக்கான தேவ சட்டத்திற்கு, உபதேசத்திற்கு கீழ்ப்படியும்போது, தேவனும் அவருடைய சமூகத்தி லிருக்கும் ஆயிரமாயிரம் தூதர் களும் மகிழ்ச்சியடைவர்.

காணாமற் போன ஆட்டைப் பற்றிய இந்த உவமை, நம்மீது நமது தேவனும், அவருடைய குமாரனும் கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பை நமக்கு நினைவுபடுத்து கிறதாக இருக்க வேண்டும். தேவன் நம்மை, நேசித்து, நம்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள படியால் இச்சிறு பிராயத்திலிருந்து நாம் அவரைப் பின்பற்றுகிற வர்களா யிருக்க வேண்டும். அவருக்குப் பிரியமானதை மாத்திரம் செய்ய தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்தால் நம்முடைய வாழ்க்கை ஆசீர்வாதமாயும், எதிர்காலம் பிரகாசமானதாகவும் இருக்கும்.

**R. Abel Rodger Nayagam**

# கர்த்தருடைய சபை வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்கிறது.

கர்த்தருடைய சபை, வாரம் தவறாமல் ஆராதிக்கும்படி ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி வருகிறது. அந்த சமயத்தில் இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நினைவு கூறும்படி கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம், கர்த்தருடைய வார்த்தையின் மூலம் போதிக்கப்படவும், பக்திவிருத்தியடையவும் நேரம் எடுத்துக் கொள்கிறோம். சபை கூடிவரும்போது, பாடுவதினாலும், ஜெபத்தினாலும், கொடுத்தலாலும் தேவனை ஆராதிக்கிறோம். கர்த்தருடைய சபை ஞாயிற்றுக்கிழமை கூடி வருவதற்கு சில விசேஷித்த காரணங்கள் உண்டு.

### ஏன் ஞாயிற்றுக்கிழமை ஆராதிக்க வேண்டும்?

**முதலாவதாக:-** ஞாயிற்றுக்கிழமைகளில் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடந்திருப்பதால் சபை அந்த நாளில் ஆராதிக்கிறது!

1. இயேசு மரணத்தை ஜெயித்து, வாரத்தின் முதல் நாளில் தான் உயிர்த்தெழுந்தார், "வாரத்தில் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்" (மாற்கு. 16; 9).

2. பரிசுத்த ஆவியானவர், இந்த நாளில் அப்போஸ்தலர்கள் மீது வந்தார். "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". (அப். 2 ; 1 – 4) "பெந்தெகொஸ்தே" நாள் என்றால் 50வது நாள் என்று பொருள் பஸ்கா பண்டிகைக்கு பின் 50 வது நாளில், 'ஆயத்த பிரமாணத்தின்படி அநுசரிக்கப்படவேண்டிய ஒரு பண்டிகைதான் இது. ஓய்வு நாளுக்கு மறுநாளில்" இப்பண்டிகை அநுசரிக்கப்படவேண்டும். (லேவி. 23 ; 11, 15) ஆகவே, பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் பெற்றதும், சுவிசேஷத்தை பிரசங்கித்தும் ஞாயிற்றுக்கிழமைகளில்தான்.

3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை அந்த நாளில் தான் தொடங்கியது. அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் இரட்சிப்பை பிரசங்கித்தார்கள், அநேகர் மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.2; 37*42) அவர்கள் ஒருமனப்பட்டு ஐக்கியமாக இருந்து, உலகம் முழுவதும் சுவிசேஷப் பணி செய்தார்கள். கர்த்தருடைய சபை நடைமுறையில் இயங்க ஆரம்பித்த நேரத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் ஒரு முழுமையான மாற்றத்தை காணலாம்.

4. இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நினைவுபடுத்தும் கர்த்தரின் பந்தி அந்த நாளில் சபையில் அநுசரிக்கப்பட்டது (அப். 20 ; 7).

5. சபைகள், ஞாயிற்றுக்கிழமை கூடிவருவதை வழக்கமாக கொண்டது. மற்றகாரியங்களை குறித்து சில கட்டளைகள் கொடுக்கப்பட்டது. வாரத்தின் முதல் நாளில் "ஏதாவது சேர்த்து வைக்கும்படி" கட்டளை கொடுக்கப்பட்டது (1. கொரி. 16.1, 2) சபையாக கூடிவரும் வேளையை புத்தி சொல்லும்படியாக பயன்படுத்தும்படி கட்டளை கொடுக்கப்பட்டது (எபி. 10; 25).

**இரண்டாவதாக:-** கிறிஸ்துவின் சபைகள் ஞாயிற்றுக்கிழமை ஆராதிப்பதற்கு, ஒரு முக்கியமான கொள்கை உண்டு. இயேசு, அப்போஸ்தலர்களை உலகெங்கும் போகும்படி கட்டளை கொடுக்கும்போது, நீங்கள் சீஷர் ஆக்குகிறவர்களுக்கு, "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்று சொன்னார் (மத்.28; 20). ஆகவே ஆதித்திருச்சபை கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல் நாளில் அநுசரிக்கிறதேனென்றால், அதை அப்போஸ்தலர் அப்படி செய்யும்படி உபதேசம் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். அப்படி அப்போஸ்தலர்கள் கட்டளையிட்டிருந்தால், இயேசுவின் கட்டளையை பின்பற்றும்படியே அதை செய்திருக்கிறார்கள் தானே. ஆகவே, அப்போஸ்தலர்கள் நேரிடையாக வழிநடத்தப்பட்ட ஆதித் திருச்சபை ஞாயிற்றுக்கிழமை ஆராதிக்கும்படி கூடி இருப்பது நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒன்றாயிருக்கிறது.

**மூன்றாவதாக:-**

கிறிஸ்துவை கனம் பண்ணும்படியாக, ஆதித் திருச்சபை ஞாயிறு அன்றே கூடியதற்கு வரலாற்று ஆசிரியர்கள் தரும் ஆதாரங்கள் அநேகம் உண்டு.

1. அந்தியோகியாவின் இக்நாடிகஸ் (Ignatius of Antioch), சொல்லும் போது, "கிறிஸ்துவின் ஒவ்வொரு நண்பனும், கர்த்தருடைய நாளை, பண்டிகையாகவும், உயிர்த்தெழுந்த நாளாகவும், வார நாட்களில் பிரதானமானதாகவும், வார நாட்களில் அரசியாகவும் எண்ணி அதை கடைபிடிக்க வேண்டும்" என்று சொன்னார். இந்நாடிகஸ் என்பவர் கி.பி. 37 முதல், கி.பி. 108 வரை வாழ்ந்தார். அவர் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்.

2. ஜஸ்டின் மார்டயர்(Justin Martyr):- இவர் கி.பி. 100 முதல் கி.பி. 165 வரை வாழ்ந்தவர், "ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்படும் நாளிலே, பட்டணத்திலும் நாட்டிலும் உள்ள மக்கள் எல்லாம் * ஓரிடத்தில் கூடி வந்தனர்..........உணவு, திராட்சைரசம், தண்ணீர் இவைகள் கொண்டுவரப்படுகிறது.......எல்லாருக்கும் விநியோகிக்கப்படுகிறது, எல்லாரும் நன்றி சொல்லுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் அன்று பொதுவாக ஆராதனைக்கு கூடி வரும் நாள் ஏனென்றால், நம் தேவன் உலகத்தை உண்டாக்கின நாள் அதுவே. நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவும் அந்நாளில் தான், மரித்ததிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார்" ஜஸ்டின்; முதலாம் நூற்றாண்டில் ஆதித் திருச்சபையில் செய்ததை இரண்டாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து செய்தார்கள் என்பதற்கு சாட்சி கொடுக்கிறார்.

இவர்களைப் போன்றே இன்னும் அநேக வரலாற்று ஆசிரியர்களை நாம் மேற்கோள் காட்ட முடியும். இவர்கள் எல்லாரும் ஆதித் திருச்சபை என்ன செய்தது என்பதை சொல்லுகிறார்களே தவிர மற்றபடி உபதேச சட்டங்களை அவர்கள் நமக்கு கொடுக்கவில்லை.

**பழைய ஏற்பாட்டு ஓய்வு நாள்**

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத். 20; 8). என்று யூதர்களுக்கு சொல்லப்பட்டது உண்மையாயிருந்தாலும், அந்த உடன் படிக்கை இஸ்ரவேலர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது (உபா. 5; 1-3, 12-15). ஆபிரகாமின் சந்ததி வழி வந்த இஸ்ரவேலர்களுக்கும், தேவனுக்கிடையேயான உடன்படிக்கையாக இது இருக்கிறது. (யாத். 31; 17). ஏழாம் நாளில் தான் யூதர்கள் ஓய்வெடுக்கும்படியாக நியமிக்கப்பட்டது (யாத். 20 ; 9, 10). மோசேயுடன், எகிப்தைவிட்டுக் கிளம்பி, சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரை ஓய்வு நாளை அவர்கள் அறியவுமில்லை அதை அவர்கள் கைக்கொள்ளவுமில்லை (நெகேமியா.9;13,14) அன்றைய யூதர்கள் ஓய்வுநாளை கைக்கொள்ளுவது

சரிதான்; ஆனால் அந்த சட்டம் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப் படவில்லை. உண்மையில், மோசேயின் நியாயப்பிரமாணத்தை நாம் கடைபிடிக்க வேண்டாம் என்று நேரடியாக கிறிஸ்தவர்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். (ரோமர். 7; 1-6). அந்த பிரமாணம் சிலுவையிலே ஆணியடிக்கப் பட்டது (எபே. 2; 14-16 கொலே. 2; 14). கிறிஸ்தவர்கள், இயேசுவை பின்பற்றுவதால், அவருடைய புதிய கற்பனையையே அவர்கள் கைக்கொள்ளவேண்டும் (எபி. 8; 6, 8). இந்த புதிய பிரமாணத்தில், கிறிஸ்தவர்களை ஞாயிற்றுக்கிழமையிலே தேவனை ஆராதிக்கும்படி அவர் வழி நடத்துகிறார்.

வேதம் என்ன போதிக்கிறது?

வாரத்தின் முதல் நாளில், அதாவது ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்தவர்களை ஆராதிக்கும்படி கட்டளையிடுகிறது. அந்த நாளில், இயேசுவின் தியாகத்தை கிறிஸ்தவர்கள் நினைப்பார்கள். ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துவார்கள். தங்கள் வருமானத்திலிருந்து தேவனுக்கு கொடுப்பார்கள், பாடுவார்கள், ஜெபிப்பார்கள்.

நாமும் ஆதித்திருச்சபை செய்ததை மீட்டமைப்போமானால், அவர்களின் வழி நடக்க முயற்சிப்போமானால் நாமும் ஞாயிற்றுக்கிழமையில் தான் கூடிவந்து தேவனை தொழுது கொள்ளுவோம்.

**Roy. H. laxier, Jr**

## தீர்க்கதரிசன ஆகமங்களின் கால அட்டவணை

1. ஒபதியா 845 கி.மு.
2. யோவேல் 800 கி.மு.
3. யோனா 780 கி.மு.
4. ஆமோஸ் 755 கி.மு.
5. ஓசியா 750 கி.மு.
6. ஏசாயா 725 கி.மு.
7. மீகா 725 கி.மு.
8. நாகூம் 625 கி.மு.
9. செப்பனியா 625 கி.மு.
10. எரேமியா 600 கி.மு.
11. ஆபகூக் 606 கி.மு.
12. புலம்பல் 586 கி.மு.
13. தானியேல் 575 கி.மு.
14. எசேக்கியேல் 575 கி.மு.
15. ஆகாய் 520 கி.மு.
16. சகரியா 520 கி.மு.
17. மல்கியா 444 கி.மு.

# முக்காடு

அந்த ஒளி அவன் இருதயத்தின் மேலிருந்த அந்த முக்காட்டை நீக்கிற்று. உடனே அவன் ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர், என்று தன்னை முற்றிலுமாய் ஒப்புக் கொடுத்தான். எந்த தமஸ்குவிற்கு சென்று கிறிஸ்தவர்களை கொலை செய்யும்படியும் துன்புறுத்தும்படியும் அவர்களை சிறைபிடிக்கும் படியும் சென்றாரோ அங்கேதான் தம் முதல் பிரசங்கத்தை தொடங்கினார். அவர் அதிகமாய் திடன் கொண்டு இவரே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தி தமஸ்குவிலே குடியிருந்த யூதர்களை கலங்க பண்ணினார். (அப். 9 : 21) இதை கேட்டவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டு எருசலேமிலே இயேசுவின் நாமத்தை தொழுதுகொள்கிறவர்களை நாசமாக்கி இங்கேயும் அப்படிப்பட்டவர்களை கட்டி பிரதான ஆசாரியர்களிடத்தில் கொண்டு போக வந்தவன் இவனல்லவா என்றார்கள். இந்த முக்காடு நீக்கப்பட்ட பவுல் அப்போஸ்தலன் தான் மோசேயின் முக்காடிட்ட உபதேசத்தை போல நாங்கள் முக்காடிட்டு கொண்டு பிரசங்கிக்கிறதில்லை என்று கொரிந்து சபைக்கு, அது பின்வாங்கி போகாதபடிக்கு பழைய பிரமானத்தை குறித்து விளக்கி புதிய பிரமானத்தை குறித்து அவர்களுக்கு போதித்தார்.

ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவான ,ஊழியத்தை பெற்று நியாய பிரமானத்தின் கீழ் கட்டுப்பட்டு தன் இருதயத்தின் மேல் முக்காடிட்டு கொண்டிருப்பவர்களின் ஒருவரான யூதருக்குள்ளே அதிகாரியாகிய நிக்கதோமு எனப்பட்ட ஒரு மனுஷன் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் இராக்காலத்திலே வந்து ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தேவன் தன்னுடனே இராவிட்டால் நீர் செய்கின்ற இப்படிப்பட்ட அற்புதங்களை செய்ய மாட்டான் என்றான். அதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவன் ஆக்கினைத் தீர்ப்புக் கேதுவான ஊழியத்தின் கீழ் வந்தமையால் நீதிக்குரிய மகிமைபொருந்திய உபதேசத்தை அவனுக்கு போதித்தார். யோவி; 3: 14 சர்பமானது வனாந்திரத்தில் உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படி உயர்த்தப்பட வேண்டும் என்று சொல்லி உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்திலே அனுப்பாமல் அவராலே உலகம்

இரட்சிக்கபடுவதற்காகவே அவரை அனுப்பினார். மேலும் அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படான் என்று, ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷனுடைய கிரியைகள் பொல்லாதவர்களாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியை பார்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்கு காரணம், பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியை பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்க படாதபடிக்கு ஒளியிடைத்தில் வராதிருக்கிறான் என்றார்.

நாமோ அவ்வண்ணமாய் முக்காடிட்டு கொள்ளும் நியாயப் பிரமாண ஊழியத்தின்கீழ் வராமல் இயேசு கிறிஸ்துவின் மகிமை பொருந்திய ஒளியின் உபதேசத்தின்கீழ் வந்திருக்கிறோம். எனவே, நாம் வெளிச்சத்தின் பிள்ளையாக எப்பொழுதும் எழும்பி பிரகாசிக்க வேண்டும். ஏசா: 55:7-ல் துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன். அவர் அவன்மேல் மனதுருகுவார். ஆகவே நாம் வெளிச்சத்தை விட்டு இஸ்ரவேலரை போல கடின மனதுள்ளவர்களாய் இருப்பதில் முக்காடிட்டு கொண்டிருப்போமானால் நீதிக்குரிய மகிமை பொருந்திய சுவிஷேசத்தை உணர்ந்தவர்களாயிருந்தும் கீழ்படியாமையினாலே ஆக்கினைத்தீர்ப்புக்கு கேதுவானவர்களாவோம். மோசேயின் மூலம் கேட்ட தேவனுடைய கற்பனைகளை இஸ்ரவேலர் உணர்ந்தார்கள். ஆனால் வணங்கா கழுத்துள்ளவர்களாய் கீழ்படிதலிலே கிரியை இல்லாமல் போனார்கள். நோவா இரட்சிக்கப்பட்டது உணர்வுகளாலா, அல்லது பேழையினாலே என்று நம்மை நாமே கேட்கும்போது என்ன சொல்லுவோம். உணர்வுகளால் என்போமானால் அது சரியாகாது. உணர்வுகளால் கேட்கவும் பார்க்கவும் தான் முடியும். உணர்வு என்பது தெரிந்து கொள்ளுதலே. கிரியைகள் தான் உணர்வுகளை செயல்படுத்த முடியும். கர்த்தரின் வார்த்தைக்கு செவி சாய்த்து அவர் சொன்னவிதமாய் நோவா பேழையை கட்டினான். அங்கே நோவாவின் உணர்வுகளோடு தேவனின் வார்த்தை குறித்தான விசுவாசம், கீழ்படிதல், கிரியையாகவும் காணப்பட்டது. எனவே, தான் அவர் கட்டின பேழையிலே இரட்சிக்கப்பட்டார். (எபி, 11: 7) எனவே நன்றியறிதலாக பவுல் அப்போஸ்தலன் (கொலோ: 1: 12, 13)-ல் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்திரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியாக்கினவரும் இருளின் அந்தகாரத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி நமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமான பிதாவை ஸ்தோதரித்து, அவரிடத்தில் திரும்பக் கடவோம் என்றார். குமாரனாகிய

அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கின்றது. அது மட்டுமல்ல இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட முக்காடிட்ட ஆக்கினைத்தீர்ப்புக் கேதுவான கற்பனை நமக்கு இராமல் பாவமன்னிப்புக்கேதுவான மீட்பில் நாம் பிரவேசித்திருக்கிறோம். மேலும் II கொரி 3: 17ல் நாம் பார்க்கும் போது கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு, நாம் எல்லோரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதை போல கண்டு ஆவியாயிருக்கின்ற கர்த்தரால் அந்த சாயலால் தானே மகிமையின் மேல் மகிமையடைந்த மாறுபடுகின்றோம். இவ்விதமாய் நாம் மகிமையின் பிள்ளைகளாயிருக்கின்றோம். மட்டுமல்ல (எபே; 5: 8)ல் நாம் பார்க்கும் போது இப்போதோ கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்று எச்சரிக்கபடுகின்றோம். முடிவாக (II கொரி 4: 6) ல் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு பிரகாசிக்க சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவிலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்ற பண்ணும் பொருட்டு எங்கள் இதயங்களில் பிரகாசித்தார். வச. 4: 5ல்

தேவனுடைய சாயலாய் இருக்கின்ற கிறிஸ்துவின் மகிமையான சுவிஷேசத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்கட்கு (இஸ்ரவேலருக்கு) பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான்.

எப்படியெனில் இஸ்ரவேலின் முக்காடு நீக்கத்தக்க புதிய உடன்படிக்கையின் தீர்க்கதரிசனம் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் உரைக்கப்பட்டது. ஏசா 25: 6-9. சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்கட்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுவார். அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும். சகல ஜனங்க்ள் மேலுள்ள முக்காட்டையும் சகல ஜாதிகளையும் மூடியிருக்கின்ற மூடலையும் இந்த மலையிலே அகற்றிப் போடுவார். அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரை துடைத்து தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார். கர்த்தரே இதை சொன்னார் என்பதை அறிந்தும் அவர்கள் உணரவில்லை. அறியவில்லை. அதை போலவே இயேசுவின் மரணத்தின் மூலம், நம் பாவத்திலிருந்து விடுதலை எனும் இரகசியத்தை அவரின் சீஷர்கள் கூட புரிந்து கொள்ள வில்லை. லூக்கா 24 : 44 இறுதியாக கிறிஸ்து அவர்கட்கு

மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் என்னை குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியுள்ளது. உங்களோடு இருந்தபோது உங்களுக்கு சொல்லி கொண்டு வந்த சுவிசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார் என பார்க்கின்றோம். அம்மட்டும் அவர்கள் அவரோடு எல்லா நேரமும் இருந்தும் அவரை புரிந்து கொள்ள வில்லை. இதைதான் இங்கே நமக்கு எபிரேய ஆசிரியர் எபி. 4: 2, 3 சுவிசேஷம் அவர்கட்கு அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்பட்டது. கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால் அவர்கள் கேட்ட வசனம் அவர்கட்கு பிரயோஜனபடவில்லை. விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாருதலில் பிரவேசிக்கின்றோம். நித்திய கானானிலும் பிரவேசிப்போம், என்று நம் இருதயங்களில் முக்காட்டை எடுத்து போடுகின்றார். நாம் இதனை விசுவாசிப்போனால் தேவன் தாமே நம்மை என்றென்றும் மகிமையின் ஒளியிலே காத்து கொள்வார். ஆமென்.

**சகோ. டேவிட் வில்லியம்ஸ்**

# வெளிப்படுத்தலில் எண்-4

1. உலகத்தின் திசைகள் நான்கு.
2. ஊரின் எல்லைகள் நான்கு.
3. வீட்டின் சுவர்கள் நான்கு.
4. முன் இருந்த உலக ராஜ்யங்கள் நான்கு
5. குதிரை வீரர்கள் நான்கு.
6. பூமியில் நான்கு புறத்தில் உள்ள தூதர்கள் நான்கு.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

மனித வர்க்கத்திற்கு இரட்சிப்பை அருள தேவன் கொடுத்த விலை என்ன?

1. எபிரேயர் 9 : 22
2. 1 பேதுரு 1 : 18, 19
3. எபேசியர் 1 : 17.
4. வெளி 1 : 5.

ஞானஸ்நானம் பெற்ற பின் நாம் பாவம் செய்தால் என்ன நிகழ்கிறது? தேவன் ஏதாகிலும் வழிவகை வைத்திருக்கிறாரா?

1. முதலாவது .......பின்பு பயணம் செய்தால் நாம் மோசமானவர்களா? மனதில் முதலாவது நம்முடைய பாவங்கள் தேவனையும் அவருடைய குமாரனையும் எவ்வளவு வேதனைப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
2. நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காக அவர் கொடுத்த விலை அதாவது தியாகம் என்ன என்பதை எண்ணிப் பாருங்கள்.
3. நாம் மனிதர்களாயிருப்பதால் சமயங்களில் பாவத்தில் விழுந்து போவோம் என்பதை தேவனுக்குத் தெரியும் என்கிற அறிவோடு சேர்த்துப் பார்க்க வேண்டும்.
    1. ரோமர் 3 : 23.
    2. 1 யோவான் 1 : 8

தேவனுடைய நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் அவர் நம்மை நன்றாகத் தெரிந்து ஆழமாக நேசிப்பதால் நம்முடைய பாவ மன்னிப்புக்கென்று வழி வைத்திருக்கிறார்.

1. யோவான் 1 : 7
2. அப்போஸ்தலர் 8 : 22
3. 1 யோவான் 1 : 9.

வஞ்சிக்கப்படாதிருங்கள் அது பாவத்திற்கு எதிரான ஒரு நிரந்தர போராட்டமாகும்.

1. I பேதுரு 5 : 8
2. லூக்கா 22 : 31
3. எபேசியர் 6 : 12

ஆனால் தற்காப்புக்கான வழியில்லாமல் தேவன் நம்மை விட்டுவிடவில்லை.

1. எபே 6: 10
2. எபேசியர் 6.....11-17 தேவனுடைய சர்வாயுத வர்க்கங்கள்
3. 1 யோவான் 2 : 14
4. யாக். கோபு 4 : 7

இயேசுவின் இரட்சிக்கும் இரத்தத்தின் பலனை மனிதன் எப்படி பெறுகிறான்?

1. பழைய பிரமாணத்தின் கிரியைகளாலா? அல்லது மனித சட்டங்களாலா, பழக்கவழக்கங்களாலா, பாரம்பரியங்களாலா

   1. ரோமர் 3 : 20

2. அப்படி இல்லாவிட்டால் அதற்குப் பதில் என்ன.

   ரோமர் 3 : 20-28.

3. அது இன்று அநேகரால் போதிக்கப்படுகிறதா, விசுவாசம் மட்டும் போதுமா யாக்கோபு : 14 - 26.
4. இயேசுவோடு நெருங்கி இருக்கும்படி நம் பாவங்கள் போகத் தக்கதாக எப்படி நம்முடைய விசுவாசம் அறிக்கைப் பண்ணப்பட வேண்டும்.

வேதம் என்ன சொல்கிறதென்று பார்ப்போம்:-

| | | |
|---|---|---|
| லூக்கா 13 : 3 | - | மனந்திரும்பு |
| ரோமர் 10 : 9, 10 | - | இயேசுவை கர்த்தரென்று அறிக்கை செய். |
| அப் 22 : 10 | - | உன் பாவங்கள் கழுவப்படுவதற்கு, |
| மாற்கு 16 : 16 | - | இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெறு. |
| அப். 2 : 39 | - | பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் |
| அப். 10 : ........ | - | கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட |

ஞானஸ்நானத்தை குறித்து புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகள் என்ன சொல்கின்றன?

1. ரோமர் 6 : 3, 4, 17, 18.
2. 1 கொரிந்தியர் 12 : 13.
3. கலாத்தியர் 3 : 26 - 20.
4. எபேசியர் 4 : 50.

G. தானியேல்

Charlie Dipalma



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday-<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



**FOR FREE DISTRIBUTION ONLY**

***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

### ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

**சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY SAHANA ERODE © 2254984